**கவனிக்க.-** *30.11.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1788 - 2012 දෙසැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2012.12.07

*1788 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1553 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – |


**கவனிக்க.-** (i) *சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *மிஸ்டிகல் ரோஸ் சர்வதேச நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## அரச சேவை ஆணைக்குழுச் சபை

கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரிய கல்வியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்தின் வெற்றிடங்கள்

கல்வி அமைச்சின் கீழுள்ள கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கல்லூரிகளின் ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2012.12.26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரிய கல்வியலாளர் சேவையின் 2-I வெற்றிடங்கள்" மற்றும் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் கல்விக் கல்லூரி அல்லது ஆசிரிய கல்லூரியினைக் குறிப்பிடுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவங்களை தமது நிறுவனப் பொறுப்பாளர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய தினத்துக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

3.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் வாசகத்தின் 12.1 மற்றும் 12.6 தொடக்கம் 12.12 வரையான பிரிவுகள் உரியதாகும்.

3.2 வதிவிடப் பயிற்சி வழங்கப்பட்டுள்ள கல்விக் கல்லூரி எல்லைக்குள் வதிய வேண்டும்.

3.3 பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி சேவையின் தேவைக்கமைய எந்தவொரு கல்விக் கல்லூரி அல்லது ஆசிரிய கல்லூரியிலும் சேவையாற்றக் கட்டுப்படுதல் வேண்டும்.

3.4 இவ்வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவையின் பதவிக்கான நியமனங்களுக்குரியதான பொது நிபந்தனைகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

4. **பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 17 ஆவது பிரிவுக்கு அமைய பட்டம் பெற்றிருப்பது ஆங்கில மொழி மூலமாயின் பதவியுயர்வுக்காக தகைமை பெறுவதற்கு க. பொ. த. (சா. த.) அல்லது சமமான பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்காக திறமைச்சித்தி அல்லது அதனைவிட உயரிய சான்றிதழினைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

5. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.- ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரம் :**

5.1 ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின்கீழ் உப ஆவணப்படுத்தப்பட்ட பதவியில் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்து சேவையில் நிரந்தரப்படுத்தியிருத்தல் மற்றும் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-II ஆம் தரத்துக்குரிய வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல் ; மற்றும்

5.2 கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது டிப்ளோமா சான்றிதழ் கொண்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கலை மற்றும் தொழில்சார் தகைமையினைப் பூர்த்திசெய்திருத்தல் ;

5.3.1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கல்வி தொடர்பான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது கல்வி தொடர்பான உயரிய பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

5.3.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பான பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் அதிவிசேட அல்லது திறமைச் சான்றிதழுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையின் பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

5.3.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பில் (உயர்) சித்தியுடன் பட்டம் அல்லது பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையின் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- உரிய தினத்துக்கு (1995.01.01) கல்விக் கல்லூரியில் நிரந்தர விரிவுரையாளராக அல்லது உதவி விரிவுரையாளராக அல்லது 5 வருடங்களைவிடக் குறையாத சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள 45 வயதினைத் தாண்டியுள்ளவர்கள், மேற்கூறப்பட்ட 5.1.2 ஆம் வாசகத்தின் கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது டிப்ளோமா பெற்றிருக்கும் தேவையில் இருந்து மாத்திரம் விடுவிக்கப்படுகின்றார்கள்.

6. **சம்பள அளவு** :

6.1 சம்பள அளவு எஸ்எல்-2006

7. **தேர்ந்தெடுக்கும் முறைகள்** :

7.1 இவ்வாட்சேர்த்துக்கொள்ளலானது, அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால், இவ்வாணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் மீது செய்யப்படும்.

7.2 நேர்முகப் பரீட்சைச் சந்தர்ப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் முதற்பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

7.2.1 பிறப்புச் சான்றிதழ் (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் அல்லது பெப்டிசன் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

7.2.2 பட்டச் சான்றிதழ் அல்லது கல்வி தொடர்பான ஏனைய சான்றிதழ்கள்

7.2.3 தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள்

7.2.4 சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள உயர் சான்றிதழ்கள்

7.3 சகல வெற்றிடங்கள் அல்லது ஏதேனும் ஒரு வெற்றிடத்தை நிரப்பாதிருக்கும் உரிமை அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு உரியதாகும்.

7.4 கடந்த ஐந்து (05) வருடங்களுக்குள் தண்டனைக்கு உட்படாது, சம்பளப்படி உயர்வுகளைப் பெற்று திருப்திகரமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7.5 நேர்முகப் பரீட்சையின்போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8. ஒரு கல்விக் கல்லூரி அல்லது ஆசிரிய கல்லூரிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் அதற்காகத் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசசேவை ஆணைக்குழுச் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ். எம். கோடாபய ஜயரட்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

அரச சேவை ஆணைக்குழுச் சபை,
2012, நவெம்பர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரிய கல்வியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்தின் வெற்றிடங்கள்**

(ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும். ஒரு கல்விக் கல்லூரி அல்லது ஒரு ஆசிரிய கல்லூரியைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் அதற்காக தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

1. (i) விண்ணப்பிக்கும் பதவி :----.
(ii) உரிய கல்விக் கல்லூரி :----.
(iii) விண்ணப்பிக்கும் மொழி :----.
(iv) 2-I தரத்துக்கு விண்ணப்பிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் 5.0 இன்கீழ் தகைமை பெறும் ஒப்பளவு இலக்கம் :----.

2. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) திரு./திருமதி/செல்வி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Rev./ Mr./ Mrs/ Miss :----.
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.

3. (i) அலுவலக முகவரி :----.
(ii) சொந்த முகவரி :----.
(iii) தனிப்பட்ட தொலைபேசி இல. :----.

3. (i) பிறந்த திகதி :----.

5. பிரஜாவுரிமை :----.
(i) அவ்வாறாயின் பரம்பரை மூலம்/பதிவின் மூலம் :----.

6. தாங்கள் அடங்கும் இன வகை :
(சிங்களம் - 1, தமிழ் - 2, முஸ்லிம் - 3 வேறு - 4) : ☐

(உரிய இலக்கத்தை கூண்டிற்குள் இடுக)

7. (i) முதல் நியமனத் திகதி மற்றும் பதவி :----.
(ii) தற்போதைய பதவி மற்றும் அதற்கு நியமித்த திகதி :----.
(iii) தற்போதைய சேவை இடம் :----.
(iv) ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்தின் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தி/சித்தியெய்தவில்லை என்பது தொடர்பாக மற்றும் சித்தியெய்தியிருப்பின் பெறுபேறு செல்லுபடியாகும் திகதி :----.

8. **கல்வி மற்றும் தொழில்சார் தகைமை தொடர்பான விபரங்கள் :**

(i) முதல் பட்டம் :

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவகம் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ii) பட்டப்பின் பட்டம் :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவகம் | ஆண்டு | வகுப்பு | விசேட/திறமை/ சாதாரணம் |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்வி டிப்ளோமா :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவகம் | பாடநெறிக்குத் தேவையான காலம் | விசேட திறமைச் சித்தி தொடர்பாக | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) ஏனைய தொழில் தகைமைகள் (டிப்ளோமா சான்றிதழ் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரிய சான்றிதழ் தொடர்பான விபரங்கள்) :

| சான்றிதழின் பெயர் மற்றும் சான்றிதழ் வழங்கிய நிறுவகம் | பாடநெறிக்குத் தேவைப்படும் காலம் | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| | | |

(v) ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சிகள் :

| க. பொ. த. (சா./த.) | சாதாரணம்/திறமை/ விசேட சித்தி | பெறுபெறுகள் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|
| | | |

| ஆங்கிலப் பாடத்துக்கு உரியதாகப் பெற்றுள்ள ஏனைய சான்றிதழ்கள் | வழங்கப்பட்ட நிறுவகம் மற்றும் செல்லுபடியாகும் திகதி | தரம் |
|---|---|---|
| | | |

09. ஏதேனும் குற்றச்செயலுக்காக தாங்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

10. தற்போது தங்களுக்கு எதிராக திணைக்களத்தினால் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதா ? இன்றேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்குட்படுத்தப்படுகின்றதா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும், சரியானதும் எனக் குறிப்பிடுகிறேன். இதிலுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் அதற்கமைய இப்பதவியினைப் பெற்றுக்கொள்ளத் தகைமையற்றவர் எனத் தீர்மானிக்கப்படும் என்றும் பதவி உயர்வினைப் பெற்றதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் நட்டஈடு பெறாது பதவியில் இருந்து நீக்கப்படவும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

............................................ இன் விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இத்திணைக்களத்தில் நிரந்தரம்/ தற்காலிகம்/ அமைய அடிப்படையில் ........................................ ஆக சேவையாற்றுவதாகவும், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறிவிக்கிறேன்.

----,
திணைக்கதள் தலைவரின்/அவருக்குப்
பதிலாக
அதிகாரம்பெற்றுள்ள அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

நிறுவகம் :----.
திகதி :----.

**இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களை 2-I** ஆம் தரத்துக்குப் பதவியுயர்த்துவதற்காகப் புள்ளி வழங்கும் முறைகள்

புள்ளி வழங்குவதற்காக உரிய தகைமைகள் வெற்றிடமாகவுள்ள தினத்துக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1. **சேவை அனுபவம்**.- இ. ஆ. க. சே. 2-II தரத்தில் 5 வருடங்களைவிட மேற்பட்ட மேலதிக சேவைக் காலத்துக்காக ஒரு வருடத்துக்கு 10 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 5 வருடங்களுக்காக வழங்கப் படுகின்றது. | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50 |
| 2. **மேலதிக கல்வித் தகைமைகள்**.- இ. ஆ. க. சே. 2-I இற்கு விண்ணப்பிக்கத் தேவையான கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாகவுள்ள தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 20 |
| 2.1 பட்டம் | - 05 |
| 2.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - 10 |
| 2.3 பட்டப்பின் பட்டம் | - 15 |
| 2.4 கலாநிதிப் பட்டம் | - 20 |
| 3. **கலைசார் செயற்சாதனைகள்**.- பட்டம், பட்டப்பின் பட்ட டிப்ளோமா அல்லது பட்டப்பின் பட்டம் சமர்ப்பிக் கப்பட்ட ஆவணத்துக்காக புள்ளி வழங்கப்பட மாட்டாது என்பதுடன் ஒரு வெளியீடு மற்றும் ஒரு ஆராய்ச் சிக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும். | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10 |
| 3.1 ஆராய்ச்சி : | |
| 3.1.1 விரிவாக்கத் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை (இறுதி அறிக்கை) | 02 |
| 3.1.2 தொழிற்துறைக்குரிய ஆராய்ச்சிகள் | 01 |
| 3.1.3 பகிரங்க ஆராய்ச்சி கலந்துரையாடல் சபைக்கு சமர்ப்பித்திருத்தல் | 02 |
| 3.2 வெளியீடுகள் : | |
| 3.2.1 பாட இணை வெளியீடுகள் (பத்திரிகை, சஞ்சிகைகள் போன்றவற்றில் பிரசுரிக்கப்பட்டவைகள்) | 03 |
| 3.2.2 பாட இணைப் புத்தகங்கள் வெளியிடல் | 02 |
| 4. **தகவல் தொழில்நுட்ப இயலுமைகள்**.- (அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்) | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10 |
| 4.1 6 மாதங்கள் அல்லது அதனைவிட மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக | - 05 |
| 4.2 ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்தைவிட மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக | - 10 |

| | | |
|---|---|---|
| 5. மொழி அறிவு.- (அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.) | | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10 |
| 5.1 ஆங்கில மொழி (06 மாதங்கள் அல்லது அதனைவிட மேற்பட்ட காலம் ஆங்கில மொழி டிப்ளோமாவுக்காக) | 05 | |
| 5.2 ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட காலம் ஆங்கில மொழி டிப்ளோமாவுக்காக | 10 | |
| மொத்தப் புள்ளிகள் : | | 100 |

11-178

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

தற்காலிக பதில் அரச சட்டவாதி
(சட்டமா அதிபர் திணைக்களம்)

**ஆட்சேர்ப்பு முறை**.- தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடும் திட்டத்தின் அடிப்படையில் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்காணல் குழாமின் பரிந்துரையின் பேரில் மேற்கூறப்பட்ட ஆணைக்குழுவினால் நியமனங்கள் வழங்கப்படும். தகுதியான விண்ணப்பதாரிகள் அவர்களது துறையில் அவர்களது தகைமைகள், செயல்திறன், அனுபவம் மற்றும் திறமை என்பவற்றைக் கருத்தில்கொண்டு தெரிவுசெய்யப்படுவர்.

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

3. **சம்பளம்**.- ரூபா 28,095 (மாதாந்தம்).

4. **சேவை நிபந்தனை**.- இப்பதவி அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிரந்தர பதவி அன்று என்பதுடன் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையது.

5. **கட்டமைக்கப்பட்ட நேர்காணல் :**

| | அதிகூடிய புள்ளிகள் | விபரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் (அதிஉயர் தகைமை மாத்திரமே கருத்தில் கொள்ளப்படும்) | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணி (LLM) பட்டம் | 20 புள்ளிகள் |
| | | (ii) இலங்கை சட்டக் கல்லூரி அல்லது சட்டக் கல்விக்கான ஒருங்கமைக்கப்பட்ட சபையின் பட்ட பின் டிப்ளோமா அல்லது சட்டமாணி பட்டத்தின் பின்னான டிப்ளோமா | 16 புள்ளிகள் |
| | | (iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (LLB) பட்டம் - (1 ஆம் தரம்) | 15 புள்ளிகள் |
| | | (iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (LLB) பட்டம் - (2 ஆம் தரம்) மேற்பிரிவு | 10 புள்ளிகள் |
| | | (v) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (LLB) பட்டம் - (2 ஆம் தரம்) மேற்பிரிவு | 08 புள்ளிகள் |
| | | (vi) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி பரீட்சை (1 ஆம் தரம்) | 10 புள்ளிகள் |
| | | (vii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை (2 ஆம் தரம்) | 8 புள்ளிகள் |

| | அதிகூடிய புள்ளிகள் | விபரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| அனுபவம் | 30 புள்ளிகள் | ஒவ்வொரு வருடத்திற்கும் 5 புள்ளிகள். 20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தையுடைய சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி யிடம் இருந்து பெறப்பட்ட ஓர் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | |
| நேர்காணலில் திறன்கள் (விடய ஆய்வு மூலம் செயல் திறமை) | 40 புள்ளிகள் | வாதிடும் திறன் | 8 புள்ளிகள் |
| | | பேச்சுத் திறன் | 8 புள்ளிகள் |
| | | பதில் அளிக்கும் திறன் | 8 புள்ளிகள் |
| | | சேவைத் திறன் | 8 புள்ளிகள் |
| | | செயல் திறன் | 8 புள்ளிகள் |
| சிறப்புத் திறன்கள் | 10 புள்ளிகள் | மூட்டர் ஒருவராக அவர் பெற்ற இடம் (சட்ட பீடத்தின் பீடாதிபதியினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.) | 5 புள்ளிகள் |
| | | ஜூரர் குழுவை நயத்தல். (சட்ட பீடத்தின் பீடாதிபதியினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபரினால் வழங் கப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | முதலாம் இடம் |

6. விண்ணப்பிக்கும் முறை.- மேற்கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பம் கொழும்பு 12 இல் அமைந்துள்ள சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பொது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் கனம் சட்டமா அதிபர், கொழும்பு 12, சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு விலாசமிடப்பட்டு 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மாலை 3.00 மணிக்கு முன்னராக கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சனாதிபதி அலுவலகம்.

2012.11.21.

12-174

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

**முக்கிய கவனிப்பு.**– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2012 |
| | | வெள்ளி | 14.12.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2012 |
| | | வெள்ளி | 21.12.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2012 |
| | | வெள்ளி | 28.12.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2012 |

**அட்டவணை - 2013**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 04.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.12.2012 |
| | | வெள்ளி | 11.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.12.2012 |
| | | வெள்ளி | 18.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.01.2013 |
| | | வியாழன் | 24.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.01.2013 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2013 |
| | | வெள்ளி | 08.02.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.01.2013 |
| | | வெள்ளி | 15.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2013 |
| | | வெள்ளி | 22.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2013 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*